# கருவூலம் மற்றும் கணக்குத்துறை

| விடுநர்: | பெறுநர்: |
|---|---|
| திரு.அ.சண்முகசுந்தரம்,இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சியர்,<br>வேலூர்-632009 | அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள்,<br>வேலூர் மாவட்டம். |

ந.க.2164/2016/அ1 நாள்: .02.2020

ஐயா/அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள்: | கருவூலம் மற்றும் கணக்குத்துறை - வேலூர் மாவட்டம் - ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டம் வேலூர் மாவட்டத்தில் 01.03.2020 முதல் நடைமுறைபடுத்துதல் - அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்களும் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து தகவல் தெரிவித்தல்-தொடர்பு |
| பார்வை: | 1.வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.2164/அ1/2019 நாள்: 23.10.2019 |
| | 2. ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை அவர்கள் தலைமையில் நடைபெறும் தொடர் காணொலி கருத்தரங்கங்கள் |
| | 3. கருவூலக்கணக்குததுறை ஆணையரக செய்தி |
| | 4. வேலூர் மாவட்ட கருவூல அலுவலரின் கடிதம் ந.க.2163/அ1/2016 நாள்:05.12.2019,20.12.2019 |

***********

நிதித்துறையின் கீழ் செயல்படும் கருவூலக்கணக்குத்துறை மூலம் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த அரசால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பெறுகிறது.

வேலூர் மாவட்டத்தில் 01.03.2020 முதல் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் என்று கருவூலக்கணக்குத்துறை ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் தொடர்பாக பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு தொடர்ந்து கடிதங்கள் மூலமும் கூட்டங்கள் மூலமும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட கருவூலத்திலும் சார் கருவூலங்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வரப்படுகிறது. இருப்பினும்

- நாளது தேதிவரை சில பணம்பெற்று வழங்கும் அலுவலர்களால் IFHRMS மென்பொருளில் துல்லியமாக ஊதிய பட்டியல் தயார் செய்யப்படவில்லை -

- மேலும் IFHRMS பட்டியல்கள் தயார் செய்ய, IFHRMS நடைமுறைப்படுத்தும் போது சிரமங்களை தவிர்க்க உடனடியாக அடிப்படை கணினி கட்டமைப்பு மற்றும் இணைய வசதி பெறுமாறும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வரப்படுகிறது. வேலூர் மாவட்டத்தில் கணினி வசதி மற்றும் இணைய வசதி இல்லாமல் பல பணம்பெற்று வழங்கும் அலுவலர்கள் உள்ளதாக தெரிய வருகிறது.

- DSC (Digital Signature Certificate) பெறுவதற்காக அலுவலக தலைவரின் (DDO) மின்னஞ்சல் முகவரி (Personal E-mail ID) மற்றும் கைபேசி எண் வழங்காமல் உள்ளதாக தெரிய வருகிறது.

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் 01.03.2020 முதல் இணையோட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் கீழ்காணும் இறுதிகட்ட பணிகளை பணம்பெற்று வழங்கும் அலுவலர்கள் விரைவாக நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

1. i.**<u>Data Validation:</u>** DDO Template-ல் Office Master, Post Master, Employee Master ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட விவரங்களில் உள்ள தவறுகளை சரிசெய்யவும், நாளது தேதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை பதிவுசெய்யவும் Data Validation Software Wipro மூலம் IFHRMS செயலியில்பகிரப்பட்டுள்ளது. அதனை பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் தங்கள் அலுவலம் மற்றும் பணியாளர்கள் சார்ந்த விவரங்களை சரிபார்த்து/திருத்தங்கள் செய்து சம்பந்தப்பட்ட கருவூலத்திற்கு அனுப்பப்பட வேண்டும்

   ii. Number Statement -ல் உள்ள ஒப்பளிப்பு பணியிடங்கள் மற்றும் நிரப்பட்ட பணியிடங்கள் IFHRMS –ல் வேறுபடுவதால் Number Statement - Web Payroll – IFHRMS – மூன்றிலும் உள்ள ஒப்பளிப்பு பணியிடங்கள் (Sanctioned Post) நிரப்பப்பட்ட பணியிடங்கள் (Filled Post) & ஒழிவிட (Vacantt Post) விவரங்களை துல்லியமாக ஒத்திசைவு செய்து வேறுபாடுகளை நீக்க வேண்டும்

2. **<u>Budget Allocation:</u>** ஒவ்வொரு அலுவலகத்திற்கும் நிதி ஒதுக்கீடு தற்போது அவ்வலுவலகத்தின் துறை தலைமை/நிதி கட்டுபாட்டு அலுவலர்கள் (Head Of Department/Budget Controlling Officer)மூலம் IFHRMS –ல் நேரடியாக பதிவேற்றம்

செய்யப்படுகிறது. நிதி ஒதுக்கீடு கோரும் கருத்துருக்களும் IFHRMS மூலம் அனுப்பப்பட வேண்டும். பணம்பெற்று வழங்கும் அலுவலர்கள் தங்கள் அலுவலகத்திற்கான நிதி ஒதுக்கீடு IFHRMS –ல் வரப்பெற்றுள்ளதா என்று உறுதி செய்ய வேண்டும். இல்லையெனில் தங்கள் நிதி கட்டுபாட்டு அலுவலகங்களை தொடர்பு கொண்டு IFHRMS –ல் நிதி ஒதுக்கீடு பெற வேண்டும்.

3. 01.02.2020 முதல் கருவூலத்தில் சமர்பிக்கும் அனைத்து பட்டியல்களும் IFHRMS மென்பொருளிலும் தயார் செய்து கருவூலத்திற்கு அனுப்பப்பட வேண்டும்

4. **IVA** - IFHRMS-ல் தங்களது அலுவலக IVA (Initiator,Verifier,Approver) நிலைக்கு உரிய அலுவலர்கள் பெயர்கள் இடம்பெற்றுள்ளதா என்று சரிபார்க்க வேண்டும். அலுவலர்கள் மாறும்பட்சத்தில் உடனடியாக IVA - ல் மாற்றம் செய்யப்பட வேண்டும்

5. **Computer Infrastructure:** IFHRMS –ல் பட்டியல் சமர்பிக்க கணனி மற்றும் அதுசாாந்த (System With Win 10 OS, Printer, Scanner, Internet Connection, Static Ip) வசதிகளை பெற்று பயன்பாட்டிற்கு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

6. **Internet Connection with Static IP**: ஒவ்வொரு பணம் பெற்று வழங்கும் அலுவலகங்களும் Static Ip உடனான இணைய வசதி பெறுவது தொடர்பான விவரங்கள் பார்வை 1-யில் காணும் கடிதம் மூலம் தெரிவிக்கபபட்டது. கணினி மற்றும் இணையஇணைப்பு அனைத்து அலுவலகங்களிலும் இருப்பதைத் உறுதி செய்யுமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் 20% அலுவலகங்களில் இணைய இணைப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்து துறைகளையும் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் தங்கள் சார் அலுவலகங்களில் கணினி மற்றும் இணைய வசதி இருப்பதை உறுதி செய்து மாவட்ட கருவூலத்திற்கு அறிக்கை அளிக்க வேண்டும். இவ்வசதி இல்லாத அலுவலகங்களில் அவற்றை பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

7. **Digital Signature Certificate (DSC):** IFHRMS செயல்படுத்தும் போது பட்டியல்கள் தயாரிப்பு (Finance) மற்றும் மனிதவள நிர்வாகம் (HRMS) இரு நிலைகளிலும் Digital Signature அவசியமாகும். Digital Signature Certificate (DSC) பெறுவதற்கு

பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் மாவட்ட/சார் கருவூலத்தினை அணுகி DSC பெறுவதற்கான விவரங்களை தெரிவித்தல் வேண்டும்.

8. **SR Digitalisation:** பணிப்பதிவேடுகளை எண்மயமாக்குதலில் அனைத்து விவரங்களையும் பணியாளர்கள் சரி பார்த்து ஒவ்வொரு பணியாளரும் தங்கள் பணிப்பதிவேடு விவரங்கள் சரிபார்த்தற்கான சுய சான்று வழங்கவேண்டும் .

மேற்கூறிய பணிகளில் எவ்வித சிக்கல்கள்/சந்தேகங்கள் இருந்தாலும் மாவட்ட/சார் கருவூலங்களை உடனடியாக அணுகி தீர்வு பெறலாம்.

மாவட்ட கருவூலத்தில் தொடர்ந்து IFHRMS தொடர்பாக பயிற்சிகள்/விளக்க கூட்டங்கள் நடத்தப்படுகிறது. மேற்கூறிய பணிகளை நிறைவு செய்யாமல் நிலுவையில் வைப்பின் 01.03.2020 முதல் IFHRMS செயல்படுத்தப்படும்போது பட்டியல்கள் சமர்ப்பிப்பதில் சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் மேற்கூறிய பணிகளில் தனி கவனம் செலுத்தி உடனடியாக நிறைவுசெய்யுமாறும், வேலூர் மாவட்டத்தில் IFHRMS திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்திட முழு ஒத்துழைப்பு வழங்குமாறும் கனிவுடன் கேட்டுகொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர்

வேலூர்

19/2/2020